★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 5[illegible]

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: தை 25உ செவ்வாய் (7—2—56) ★ ★ வெளியூர்: தை 26உ புதன் (8—2—56) [இதழ் 202

பொதுத் தேர்தல்

இந்திய அரசினர் திட்டம்

புதுடில்லி, பிப். 6—

மாநிலப் புனரமைப்பு இறுதியாக எந்த உருவத்தில் இருக்கும் என்பது இன்னும் வரையறுக்கப்படவில்லையென்றாலும், 1957 பிப்ரவரி—மார்ச்சில் இந்தியா முழுமையும் தேர்தலை நடத்தி விடுவதென்று இந்திய அரசியலார் திட்டமிட்டுள்ளதாக நம்பப்படுகிறதாம்.

செங்கோட்டை பறிபோகிறது!

மலேயாவுக்குச் சுதந்திரம்

லண்டன், பிப். 6—

மலேயாவிற்குச் சுதந்திரம் அளிப்பது பற்றி பிரிட்டன்—மலேயா நாடுகளின் பிரதிநிதிகளிடையே நடைபெற்ற பேச்சு வார்த்தைகள் முடிவுற்றனவாம்; புதனன்று இது குறித்த அறிக்கை வெளியிடப்படக்கூடும்.

மலேயா முதலமைச்சர் தெங்கு அப்துல் ரெஹ்மான், மலாக்காவில் பிப். 19-ந் தேதியன்று நடைபெறப்போகும் ஒரு பொதுக் கூட்டத்தின்போது, மலேயா சுதந்திரம் பெறும் நாளை அறிவிப்பாராம்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் சிறு சேமிப்புகள் மூலம் ரூ 500 கோடி வசூலிக்க திட்டமிடப்பட்டிருக்கிறதாம்.

★★★-★★★★-★★★★★★★★★★★

'ஹர்த்தால்'

(பொது வேலை நிறுத்தம்)

★

"அரசாங்கத்தின் செயலைக் கடுமையாகக் கண்டிக்க 'ஹர்த்தாலே' சரியான முறையாகும். தேசிய அபிப்பிராயத்தைத் தெரிவிக்க, மாபெரும் பொதுக்கூட்டங்களைவிடச் சக்திவாய்ந்த மார்க்கம் இது."

★★★★★★★-★★★★★★-★★★★★

கோட்டைவிடும் காமராசர்

அண்ணு சுற்றுப்பயணம்

அரசியல் சூழ்நிலையின் காரணமாக, இத்திங்கள் இறுதியில் ஒப்புக்கொள்ளப்பட்டிருந்த சேலம் சுற்றுப்பயணம் தள்ளிவைக்கப்பட்டிருக்கிறது.

(ஆ—ர்)

வடக்கேயாத்திரை

கோவிந்த மேனன் சர்க்கார் இலாபம் தேடுகிறது

சூது தெரியாதிருக்க தட்சிணப்பிரதேச பேச்சு

திருவனந்தபுரம், பிப். 6—

செங்கோட்டைப் பகுதியை, மேற்குத் தொடர்ச்சி மலையை மையமாகக் கொண்டு எல்லைக்கோடு காணும் முயற்சியை திரு—கொச்சி அரசாங்கம் தீவிரமாக மேற்கொண்டு இருக்கிறது.

அதைச் செயலாற்றுவதற்கு அதிகாரிகள் செங்கோட்டைப் பகுதிக்கு அனுப்பப்பட்டிருக்கின்றனர்.

இந்திய அரசாங்கத்தின் தூண்டுதல் மீதுதான், திரு—கொச்சி அரசாங்கம் இச் செயலில் உடனடியாக ஈடுபட்டிருப்பதாக உறுதியாகத் தெரியவருகிறது.

செங்கோட்டை பகுதி முழுதும் சென்னையுடன் இணைக்கப்படவேண்டுமென மாகாண புனரமைப்புக் குழு சிபாரிசு செய்திருந்தது. அதை இந்தியப் பேரரசு ஏற்றுக்கொள்ள மறுத்து செங்கோட்டையை இருகூறுகளாக்கி வளமுள்ள வடக்குப் பகுதியை திரு—கொச்சியுடனும், தெற்குப் பகுதியை சென்னையுடனும் இணைக்கப்பட வேண்டுமெனத் தீர்ப்பளித்துவிட்டது.

அத்தீர்ப்பு, சென்னை அரசாங்கத்தின் ஒப்புதல் பெற்ற பிறகுதான், இந்திய அரசாங்கத்தால் இறுதியாக அளிக்கப்பட்டிருக்கிறது என்பது கருதத்தக்கது.

செங்கோட்டை ஒன்று நீங்கலாக மற்ற இணைப்புகள் தாலுகா அடிப்படையில் செய்யப்படுவனவாகும்.

செங்கோட்டை எல்லைக்கோடு நிர்ணயத் துவக்க வேலை இத்திங்கள் 20-ந் தேதியுடன் முடிவடைந்துவிடும். அதுபற்றிய அதிகாரிகளின் அறிக்கை அக்கால கெடுவுக்குள் மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பிவைக்கப்படும். மாகாணப் புனரமைப்புக் குழு மசோதாவை உருவாக்க வேண்டியதை முன்னிட்டு, மேற்படி விவகாரத்தில் தீவிரம் காட்டப்படுகிறது.

செங்கோட்டையை ஆராய்ந்தறியும் அதிகாரியின் முடிவான அறிக்கை, சென்னை அரசாங்கத்தின் பார்வைக்கும் அனுப்பி வைக்கப்படும்.

செங்கோட்டையை இரண்டு துண்டாக்கி, சாரமான பகுதியை திரு-கொச்சியுடனும், சக்கைபோன்ற பகுதியை சென்னையுடனும் இணைக்கும் திட்டத்திற்கு ஏற்கனவே தாம் ஒப்புதல் தந்துள்ளதால், மேற்படி அறிக்கையில், எந்தவிதமான சிக்கலும் சென்னை அரசாங்கத்துக்கு ஏற்பட நியாயமில்லை என உறுதியாக எண்ணப்படுகிறது.

தம் தம் மாகாணங்களை விட்டுப் பிரிக்கப்பட இருக்கும் பகுதிகளைக் குறித்தப் புள்ளி விவரங்களை தனித்தனியாகக் காட்டி, தம் தம் வரவு-செலவுத் திட்டங்களைத் தயாரித்துக் கொள்ளும்படி ஒவ்வொரு மாகாண அரசாங்கங்களுக்கும் இந்திய அரசாங்கம் உத்திரவு பிறப்பித்துள்ளதாகவும் தெரியவருகிறது.

தேவிகுளம் ?

நேரு வாக்கெடுப்புக்கு வருவாரா?

அநீதியைக் கண்டிக்க காங்கிரசாருக்குத் திராணி உண்டா?

நாட்டுப் பற்று உண்டானல் கூட்டணியில் சேரலாமே ?

சென்னையில் அண்ணு கேள்வி

(நமது நிருபர்)

சென்னை, பிப். 6—

"தேவிகுளம், பீர்மேடு யாருக்கு? தமிழர்களுக்குத்தான் என்று வாதிடுகிற கட்டம் தாண்டியாகிவிட்டது; இப்போது போராட்டக் கட்டத்திலிருக்கிறது" என்று குறிப்பிட்ட அண்ணு அவர்கள், முதல் கட்டம் குறித்து விளக்கம் தந்தார்கள்.

"அந்த வட்டங்கள் தமிழகத்துடன்தான் சேர வேண்டுமா?—என்பதற்காக வைக்கப்பட்டபரீட்சைகளில், அங்கு வாழும் தமிழர்கள் வெற்றிபெற்றிருக்கிருர்கள்; என்றுலும் அவை தமிழகத்துடன் இணைக்கப்படவில்லை என்ருல் என்ன நியாயம்? வேண்டுமானுல் மீண்டும் அங்கு வாக்கெடுப்பு நடத்தப் பண்டித நேரு முன்வருவாரா?"—என்று அறைகூவி அழைத்தார் அண்ணு!

"தமிழருக்கு நேரு இழைத்துள்ள அநீதியைக் கண்டிக்கும் திராணி காங்கிரசாருக்கு உண்டா?"—என்றும் அண்ணு அவர்கள் கேள்வி எழுப்பினர்.

காவிரிபோல மக்கள் திரண்டிருந்த மண்ணடியில் கடந்த 5—2—56 அன்று ஆற்றிய பேருரையின் ஒரு பகுதி இங்கு தரப்படுகிறது:—

"தேவிகுளம்—பீர்மேடு தமிழருக்கே உரிய பகுதிகள்; தமிழருக்குத்தான் சொந்தம்—என்று தி. மு. கழகம், கம்யூனிஸ்டு, தமிழரசுக் கழகம் ஆகிய மூன்று கட்சிகளும் கூறுகின்றன. இவற்றிற்குத் துணையாக சோஷலிஸ்டு கட்சி கூறுகிறது; பி. சோ. கட்சி நியாயம் என்கிறது; திராவிடர் கழகம் சொல்லுகிறது; இதில் வேடிக்கை என்னவென்ருல், காங்கிரஸ் கட்சியும் சொல்லுகிறது—'தேவிகுளம்-பீர்மேடு தமிழருக்கே'—என்று!

"பின் யாரோடு நமக்குச் சண்டை? சிலபேரின் செயலாற்ருதத் தன்மையுடனும் சிலரின் நயவஞ்சகத் தன்மையோடும் சிலரின் இரண்டுங்கெட்டான் நிலையோடும்தான் நமக்குச் சண்டை. "மலையாளிகளிடத்திலே நமக்குச் சண்டையா என்ருல், அல்ல; இங்குள்ள மலையாளிகள் எல்லாம் கூடிக்கொண்டு, 'தேவிகுளம்—பீர்மேடு வட்டங்களைத் தரமாட்டோம், தமிழருக்கு' என்று கூறினர்களா, என்ருல், இல்லை; இங்குள்ள மலையாளிகளுக்குத் தேவிகுளமும் தெரியாது; பீர்மேடும் தெரியாது; அவர்கள், தங்களுக்குள்ள, ஆட்சியினுல் ஏற்பட்ட அவதியினுல்—வறுமையினுல் நாட்டின் பல இடங்களுக்கும் பிழைப்புத் தேடிச் சென்றிருப்பவர்கள் தான்.

"பின் மறுப்பவர் யார்?

"தேவிகுளம்—பீர்மேடு தமிழகத்துடன் சேரவேண்டும்—என்று, சட்டசபையில் எல்லோரும் ஏகோபித்து தீர்மானம் நிறைவேற்றினுர்கள். காங்கிரஸ் மந்திரி சபையினர் அந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்தனர். மந்திரிசபையை அமைத்துள்ள காங்கிரஸ் எம். எல். ஏ.-க்கள், அவர்களை அனுப்பியுள்ள காங்கிரஸ் கட்சி, சட்டசபையில் உள்ள இதர கட்சி எம். எல். ஏ.-க்கள் எல்லாம் சேர்ந்துதான் தீர்மானத்தை நிறைவேற்றினுர்கள். நாட்டில் உள்ள எல்லாக் கட்சியினரும் கோருகிருர்கள்—'தேவிகுளம்—பீர்மேடு, தமிழகத்துடன் இணைக்கப்பட வேண்டும்'—என்று!

"இத்தனை பேர் கேட்டும் கிடைக்கவில்லை என்ருல், காரணம் என்ன? இதுதான் நெருக்கடி நிலை என்பது.

"நாட்டில் ஒரு கட்சியினர் ஒரு கோரிக்கையை எழுப்பி, வேறு ஒரு கட்சி அந்தக் கோரிக்கையை எதிர்த்தால், வாதம் சுவையுள்ளதாயிருக்கும்; சூடும் பிறக்கும். இங்கு எல்லாக் கட்சியினரும் கோருகிருர்கள்—'தேவிகுளம், பீர்மேடு தமிழர்களுக்கு வேண்டும்' என்று!

"தேவிகுளம், பீர்மேடு தமிழர்களுக்கு இல்லை என்று கூறப்படுகிறதே என்ன செய்வது?—என்று காங்கிரசாரைக் கேட்டால், 'அது தானே தெரியவில்லை' என்கிருர்கள். 'என்ன செய்யப்போகிறீர்கள், நீங்கள்?'—என்ருல், 'எதுவும் செய்யவேண்டாம்' என்கிறது மேலிடம்! 'பின், நாங்களாவது செய்யட்டுமா?'—என்ருல், 'எங்களுக்குத் தொல்லை தராமல் செய்யுங்கள்' என்கிருர்கள்.

"தேவிகுளம், பீர்மேடு தமிழர்களுக்குத் தரப்படவேண்டும் என்று கோராதவர் தமிழர்களில் எவரும் இல்லை. தவறிய தமிழர்கள்கூடக் கேட்கிருர்கள்; தெளிவில்லாத தமிழர்கள்கூடத் தெளிவு பெற்றுக் கேட்கிருர்கள். கேட்காதவர்கள் காங்கிரஸ்காரராய் வேண்டுமானுல் இருக்கலாமே தவிர, தமிழர் என்று சொல்லிவிட முடியாது.

"தேவிகுளம், பீர்மேடு தமிழ் மக்களுடையதுதான்; தமிழ் நாட்டுடன்தான் அந்தப் பகுதிகள் இணையவேண்டும் என்பதை அந்தப் பகுதி மக்கள் உலகத்திற்கும், ஆளவோருக்கும் எடுத்துக் காட்டியிருக்கிருர்கள்.

"அங்கு நடைபெற்ற இரண்டு பொதுத் தேர்தல்களிலே தங்கள் கருத்தை அறிவித்திருக்கின்றனர்.

"அந்தப் பகுதியில் உள்ள திருவாங்கூர் தமிழ் நாடு காங்கிரஸ் உறுப்பினர்களே அந்த வட்டங்களில் வெற்றி பெற்ருர்கள்—தேர்தலின்போது!

"திருவிதாங்கூர் தமிழ் நாடு காங்கிரஸ் என்பது, இங்குள்ள காங்கிரசோடு எந்த வகையிலும் தொடர்புடையதல்ல என்பது மட்டுமல்ல — இரண்டும் கீரியும், பாம்பும் போன்றவையாகும்; பெயர் தான் காங்கிரஸ்; அவ்வளவே!

"இந்தத் தி. த. நா. காங்கிரஸ், 'தேவிகுளம், பீர்மேடு, செங்கோட்டை, நெய்யாற்றங்கரை, சித்தூர் (கொச்சி) [illegible] கோட்டை, மற்றும் நாஞ்சில் [illegible] டங்கள்—தமிழர்கள் பெரும்பான்மையாக வாழ்கிற ஒன்பது தாலுகாக்களையும் தமிழகத்துடன் இணைக்க வேண்டும்' என்று கோரி, தேர்தலில் நின்றனர்; இவர்களுக்கு எதிராக மலையாளக்காங்கிரஸ் [illegible]

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 7-2-'56 செவ்வாய்

தெற்கின் தாக்கீது!

'ஆங்கிலம் இருக்கும் இடத்தில் அமர்த்தப்பட வேண்டும்' என்று வடநாட்டவர் கூறுகிற 'இந்தி' என்ற மொழி, தென்னாட்டில் வாழும் சுமார் 10-கோடி மக்களுக்கு அன்னிய மொழியாகும் — எவ்விதத் தொடர்பும், பரிச்சயமும் இல்லாத மொழியாகும் என்பதை, 'ஆங்கிலமே இந்தியாவின் பொது மொழியாக என்றென்றைக்கும் தொடர்ந்து நீடிக்க வேண்டும்' என்று தீர்மானித்திருக்கிற தமிழ்நாட்டுத் தலைவர்கள் கூட்டு முன்னணி எடுத்துக் காட்டியிருக்கிறது.

இந்தியைத் தமிழகத்தில் திணித்த ஆச்சாரியாரும், அதனை எதிர்த்து வெற்றி கண்ட பெரியாரும் அன்று அவருடன் பணியாற்றி, இன்று தி. மு. கழகத்தில் செயலாற்றி வருபவர்களும், தமிழ்ப் பெரும் புலவர்களும், தமிழரசுக் கழகத் தலைவரும், பார்ப்பன குல மணிகளும், வேறு பலரும் கடந்த ஜன. 28-ந் தேதி கூடி இந்த முடிவை மேற்கொண்டதை நாடு நன்கறியும்.

'தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் என்ற திராவிட மொழி வழங்கும் தென்னாட்டு மக்கள்மீது இந்தியைத் திணிப்பது வடிகட்டிய அநீதி' என்றும் கூட்டணியினர் இடித்துரைத்திருக்கிறார்கள்.

இந்தி மொழி, எந்தக் காரணங்களுக்காக இந்தியாவின் பொது மொழியாக—ஆட்சி மொழியாக ஆக்கப்பட வேண்டும் என்று வடநாட்டவர் கூறுகின்றனரோ, அந்தக் காரணங்கள், அடிப்படையிலேயே தவறுடையவை—தென்னக மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட முடியாதவை என்பதைத் தெளிவாகக் கூட்டணித் தீர்மானம் எடுத்துரைக்கிறது.

இந்தி மொழியை எப்படியேனும் அரசியல் சட்டம் விதிக்கிற 15 ஆண்டுகளுக்குள், இந்தியப் பேரரசின் ஆட்சி மொழியாகக் கொண்டுவந்துவிட டில்லி ஆட்சியாளர்கள் மனோவேகத்தில் செயல்பட்டுவருகின்றனர்.

'இந்தியைத் திணிப்பதில் காலந் தாழ்த்துவது, என்றைக்குமே இந்தி மொழியை எல்லா மக்கள் மீதும் திணிக்கப்பட முடியாததாகிவிடக்கூடும்; எனவே, இன்னும் துரிதமாகச் செயல்படவேண்டும்; ஆட்சி மொழியாக இந்தி ஆக்கப்பட்டு சர்க்கார் அலுவல்கள் அனைத்தும் இந்தியில் நடைபெறுவது மட்டும்கூடப் போதுமானதல்ல; பல்கலைக் கழகங்கள், கல்லூரிகள், பள்ளிகள் இங்கெல்லாம்கூட இந்திமொழியைப் போதனை மொழியாக்கிவிடவேண்டும்; கட்டாயப் பாடமாக்க வேண்டும்; என்று, டில்லிக்குத் தூபமிட்ட வண்ணமிருக்கும் முன்ஷி போன்ற இந்தி வெறியர்களும் ஏராளமாக இருக்கின்றனர்.

டில்லியும், 'இந்தி மொழியை எவர் மீதும் கட்டாயமாகத் திணிக்கும் உத்தேசம் எங்களில் எவருக்குமில்லை' என்று கூறிக்கொண்டே, அதற்கு நேர்முரணை வகையில் காரியங்களைச் செய்துகொண்டிருக்கிறது!

இப்படி வடநாட்டு ஏகாதிபத்தியவாதிகள், தென்னகத்தின்மீது தங்களின் அரசியல், பொருளாதார ஆதிக்க உரிமை நீண்ட நெடுங்காலத்திற்கு நீடித்துத் தங்களுக்குப் பயன் தருவதற்கு இந்தி, இந்தியாவெங்கணும் குறிப்பாகத் திராவிடமெங்கணும் திணிக்கப்படுவதுதான் உதவக்கூடிய ஒரே காரியம் என்ற எண்ணத்தால் தூண்டப்பட்டுத் தீவிரமாகச் செயல்பட்டு வரும் நேரத்தில், பல கோணங்களிலிருந்து பணிபுரியும் பலரும் ஒன்றுகூடி — ஆச்சாரியாரும், பெரியாரும், தி. மு. கழகமும் ஒன்றுகூடிக் கூட்டணி அமைத்து, 'இந்தியைப் புகுத்துவது வடிகட்டிய அநீதி; ஆங்கிலமே பொது மொழியாக இருக்க வேண்டும்' என்று குரல் கொடுத்திருப்பது, தமிழக மக்களுக்கு ஆறுதலும் நம்பிக்கையும் தருவதாகும்.

தென்னாட்டில் நிலவும் பல் வகை அரசியல் கருத்துக்களின் பிரதிநிதிகளும், இந்தி மொழிப் பிரச்சினையில் ஒருமனதான முடிவை மேற்கொண்டிருப்பது, சாதாரணமானதோர் நிகழ்ச்சி அல்ல.

'இந்தி ஏகாதிபத்தியம்' என்று நாம் நீண்ட நெடுங்காலமாகக் கூறிவரும் சொற்றொடரை, எதிர்பாராத இடங்கள் இன்று உச்சரிக்கின்றன. 'இந்தி திணிக்கப்படக்கூடாது' என்ற நமது குரலுக்கு, இந்தியைத் திணித்தவர்களே செவி சாய்க்கின்றனர். இந்த மாற்றங்கள் எளிதில் நிகழ்ந்துவிடக் கூடியன அல்லவே!

தமிழகத் தலைவர்களின் கூட்டணி எழுப்பியுள்ள கூட்டுக் குரல், டில்லி ஆட்சியாளர்களுக்குத் தரப்பட்டிருக்கும் தாக்கீது ஆகும். இந்தத் தாக்கீதிற்கு டில்லியாளர்கள் என்ன பதில் தரவிருக்கிறார்கள் என்பதைத்தான் தென்னாடு ஆவலோடு எதிர்பார்க்கிறது.

தொலை நோக்கும், ஆழ்ந்த சிந்தனையும், நுணுக்கமான அரசியல் யூகமும் உடையவர்களானால் டில்லியாளர்கள், தென்னகத் தலைவர்களின் குரலை அலட்சியம் செய்யமாட்டார்கள். விளைவுகளைப் பொறுத்திருந்து பார்க்கலாம்.

நாட்டுத் தீர்ப்பை ஏற்க வேண்டுமாம்!

கொத்தலாவலை கூறுகிறார்

கொழும்பு, பிப். 4—

"கிளர்ச்சியுற்ற மனோநிலையில் தேசீயப் பிரச்சினைகளுக்குப் பரிகாரம் தேடமுடியாது.

"இலங்கையில் மொழிச் சிக்கலுக்கு நாடு தரும் தீர்ப்பை மக்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவேண்டும்"

என்று, சுதந்திர நாளை ஒட்டிப் பிரதமர் கொத்தலாவலை வானொலியில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

இலங்கையில் ஒன்பதாவது சுதந்திர நாள் கொண்டாடப்பட்டிருக்கிறது.

"பிரிவு, பிளவு மனப்போக்குடன் சிக்கல்கள் குறித்துச் சிந்திப்பதற்கு, மிகவும் சிறிய நாடு இலங்கை; குழந்தைப் பருவத்திலிருக்கும் தேசம்" என்றும் அவர் குறிப்பிட்டாராம்!

ஆலைத் தொழிலாளர்களின் பழைமை வெறி!

தாழ்த்தப்பட்டோருடன் மோதினராம்!

ஆமதாபாத், பிப். 4—

இங்கிருந்து 20 மைல் தொலைவில் உள்ள கலோல் எனுமிடத்திலிருக்கும் நெசவாலைத் தொழிலாளர்கள், சாதி வெறிக்கு அடிமையான சம்பவம் ஒன்று நிகழ்ந்திருக்கிறது.

சில தாழ்த்தப்பட்ட தொழிலாளர்கள் ஆலையைச் சேர்ந்த சிற்றுண்டி விடுதிக்குள் நுழைந்தார்களாம்; இதைக் கூடாதென இதர தொழிலாளர்கள் தடுத்தார்களாம்; விளைவு: இருசாராரும் மோதிக்கொண்டிருக்கின்றனர். இரண்டு தொழிலாளருக்குக் காயமேற்பட்டதாம்.

இங்குள்ள மூன்று நெசவாலைகளிலும் வேலை செய்யும் தாழ்த்தப்பட்ட தொழிலாளர்கள் அனைவரும், சம்பவத்தை ஒட்டி வேலைக்குச் செல்லாது நின்றுவிட்டனராம்.

போலீசார் தலையிட்டு, வேறு சம்பவங்கள், நிகழாவண்ணம் தடுத்தனராம்.

ஐந்தாண்டுத் திட்டம் ஆறுண்டுத் திட்டமாகிறது

ஆளவந்தார்களின் நேரத்திற்கு ஒரு நினைப்பு

புதுடில்லி, பிப். 5—

திட்டங்கள் இந்தியப் பேரரசினர் கையில் அகப்பட்டுக் கொண்டு திண்டாடுகின்றன. பாவம்!

'முதல் ஐந்தாண்டுத் திட்டத்திற்குப் பிறகு இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் பிரமாண்டமானதாகத் தயாரிக்கப்படுகிறது' என்று செய்திகள் வந்தன.

மாநில சர்க்கார்கள், 'திட்டங்கள், எல்லாம் பரிசீலனை செய்யப்பட்டு, தென்னாட்டுத் திட்டங்கள் பாதியாக வெட்டப்பட்டு, திட்டம் பூர்த்தியாகிவிட்டது' என்றார்கள்.

பின், 'செஞ்சீனாவில் பன்னிரண்டு ஆண்டுத் திட்டம் தயாரிக்கப்படுகிறது' என்று கேள்விப்பட்டதும், 'இரண்டாம் திட்டம் ஐந்தாண்டுத் திட்டமாயிராது' என்றும், 'பதினைந்து ஆண்டுத் திட்டமாக உருவாகும்' என்றும் கூறப்பட்டது.

ஆனால் இப்போது, 'ஐந்தாண்டுமல்ல — 'பதினைந்தாண்டுமல்ல; ஆறுண்டுத் திட்டமாக உருவாகிறது' என்று செய்தி வருகிறது,

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்திற்கென செலவிடுவது என்று நிர்ணயித்த ரூ. 4,800 கோடியை, இந்த ஆறுண்டுத் திட்டகாலத்தில் செலவிடுவதெனவும், திட்டங்களில் உருமாற்றம் இல்லை என்றும், கால அளவில்தான் மாற்றம் என்றும், இது குறித்து இந்தியப் பேரரசினர் சீக்கிரமே அறிவித்து விடுவர் என்றும் கூறப்படுகிறது.

கால அளவை, ஆறுண்டாக நீடித்ததற்குக் காரணம், திட்ட நிறைவேற்றத்திற்கான நிதி வழிவகைகளைச் சரிகட்டுவதில் மிகுந்த கஷ்டமிருப்பதாகக் கூறப்படுகிறது.

முன்பு இரயில்வே வருமானம், வரி விதிப்பு, வெளிநாட்டு உதவி, சேமிப்பு ஆகிய இனங்களில் பெருவாரியான தொகை கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டதாயும், ஆனால் திட்டக் குழுவினர் இறுதியாகத் தந்துள்ள அறிக்கை, பற்றுக்குறை நிதிநிலை குறித்து எச்சரிக்கை தந்திருப்பதாயும், அதன் விளைவாகவே இப்போது திட்டம் ஆறுண்டு காலத்திற்கு நீடிக்கப்படுவதாயும் கூறப்படுகிறது.

தென்னாடும்-இந்தி மொழியும்

ஆச்சாரிய வினோபா பாவே கருத்து

ஐதராபாத், பிப். 5—

"தென்னிந்தியாவில் உள்ள மக்கள் இந்தி மொழியை நன்கு கற்றுக்கொள்கிற வரை ஆங்கிலமே தொடர்ந்து உபயோகிக்கப்படவேண்டும்,"

என்ற கருத்தை ஆச்சாரிய வினோபாபாவே தென்னாட்டிலிருந்து வந்த இந்தி பிரச்சாரர்கள் கூட்டம் ஒன்றில் பேசுகையில் வெளியிட்டிருக்கிறார்.

"ஆங்கிலம் தெரிந்தவர்கள் குறைந்தது ஒரு ஆங்கிலப் புத்தகத்தை ஏதாவது ஒரு இந்திய மொழியில் பெயர்க்கவேண்டும்; இந்த அன்புப் பணி ஏற்கப்படுமானால், இப்போது சுலபமாக ஒரு இலட்சம் புத்தகங்கள் மொழிபெயர்க்கப்பட முடியும்," என்றும் அவர் கூறியிருக்கிறார்.

'இந்தியர்கள் வேறு பல வெளிநாட்டு மொழிகளையும் கற்கவேண்டும்' என்று அவர் கூறியிருக்கிறார்.

தான் 18 மொழிகளில் பாண்டித்தியம் பெற்றவர் என்றும் தனது 58-வது வயதில் ஜப்பானிய மொழி கற்க முற்பட்டிருப்பதாயும் அவர் தெரிவித்திருக்கிறார்.

கோவாவிற்கு உதவ பாகிஸ்தான் மறுப்பு

பெல்காம், பிப். 4—

கோவாவில் உள்ள உயர்நிலைப் பள்ளிகளைப் பாகிஸ்தானுடன் இணைத்து, பள்ளி இறுதி வகுப்புத் தேர்வுகளைக் கோவாவிலேயே நடத்தவேண்டும் என்று கோவாவில் உள்ள போர்ச்சுகீசிய அதிகாரிகள் கோரியதைப் பாகிஸ்தான் சர்க்கார் ஏற்கமறுத்துவிட்டனர் என்று கூறப்படுகிறது.

கோவா மாணவர்களுக்குப் பரீட்சை நடத்துவதற்காக, இந்த ஏற்பாடு குறித்துப் பேச்சுவார்த்தை நடத்த கராச்சி சென்ற நான்கு பேரடங்கிய கல்விக் குழுவின் முயற்சி தோல்வியுற்றுவிட்டதாகத் தெரியவருகிறது.

போர்ச்சுகீசிய கோவா மாணவர்களுக்கு இதுவரை பம்பாய் சர்க்கார்தான் பள்ளி இறுதி வகுப்புத் தேர்வுகள் நடத்திப் பத்திரங்கள் வழங்கிக்கொண்டிருந்தது; ஆனால் இப்போது, வரும் மார்ச் திங்களில் நடைபெறவேண்டிய பரீட்சைகளுக்குக் கோவா மாணவர்களைப் பம்பாய் சர்க்கார் ஏற்காது என்று கூறப்படுகிறது.

பர்மா சர்க்கார் திட்டம்

சென்னை, பிப். 6—

பர்மா சர்க்கார், இந்திய 'மார்க்கெட்'டில் இவ்வாண்டில் ரூ. 5 கோடிக்குப் பண்டங்கள் வாங்குவதற்கு திட்டமிட்டுள்ளதாம்.

'ஆங்கிலத்தை அகற்றக் கூடாது'

'இந்திக்கு இடமளிக்கக் கூடாது'

போதன் ஜோசப் கருத்து

ஐதராபாத், பிப். 3—

"ஆங்கிலத்தை ஒரு அன்னிய மொழி என்பது விவேகமானதல்ல!

"மிக நெருங்கிவரும் இந்த உலகத்தில் எந்த மொழியும் அன்னிய மொழி அல்ல!

"ஆங்கிலம்தான் இமாலயம் முதல், குமரிமுனைவரை விரிவாக அறியப்படும் ஒரு மொழியாக விளங்குகிறது!

"எனவே, இந்தியாவில் இந்தி மொழியை, ஆங்கிலம் இருக்கும் இடத்தில் அரசியல் சட்டம் கூறுகிறபடி 15 ஆண்டுகளுக்குள் அமர்த்துவது விவேகமானது அல்ல,"

என்று, பெங்களூரிலிருந்து வெளிவரும் 'டெக்கான் ஹெரால்டு' என்ற ஆங்கில இதழின் ஆசிரியர் போதன் ஜோசப் கருத்தறிவித்திருக்கிறார்.

'உலகிலேயே அழகான உடை சேலைதான்'

அமெரிக்கப் பாதிரி கருத்து

புதுடில்லி, பிப். 3—

'உலகத்திலேயே மிகவும் அழகான உடை சேலைதான்,' என்று, 37 வயதான அமெரிக்கப் பாதிரியார் டாக்டர் பில்லி கிரஹாம் பத்திரிகையாளரிடம் கூறினாராம்.

'எனது மனைவி, சீனாவில் பிறந்து வளர்ந்தவர்; அவரை ஒரு 'இந்திய'ராக்குவதற்காக என்னுடன் சேலை ஒன்று கொண்டு செல்கிறேன்'

என்றும், அவர் குறிப்பிட்டாராம்!

பொருந்தா மணம் நிறுத்தப்பட்டது

கராச்சி, பிப். 3—

17 வயதுப் பெண் ஒருத்தி; அவள் அனாதை என்பதால், 55-வயதுக் கிழவனுக்கு வாழ்க்கைப் படவிருந்தாள். அந்தப் பெண்ணின் ஒரே உறவினரும் அந்தத் திருமணத்திற்குச் சம்மதம் தந்திருந்தாராம்!

55 வயதான அந்த மாப்பிள்ளை ஒரு மதத் தலைவராம்!

விவரமறிந்த பெண்கள் தலைவர்களும், சமூக சேவிகைகளும் அந்தப் பெண்ணின் இல்லத்திற்கு விரைந்தனர்; விளக்கம் தந்தனர் — பொருந்தா மணம் குறித்து! திருமணத்தைத் தடுத்து நிறுத்தியதுடன், இளைஞராயுள்ள கணவன் ஒருவனையும் அந்தப் பெண்ணுக்காகத் தேடித் தர ஒப்பமளித்தனராம்!

நில அளவு: திட்டக் குழு கருத்து

புதுடில்லி, பிப். 5—

'நிலக் கொடையின் மூலம் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 4 இலட்சம் ஏகரா நிலம் பெறலாமென்று திட்டக் குழு எதிர்பார்க்கிறதாம்.

இவற்றில் 3 இலட்சம் ஏகரா, நிலமில்லாத விவசாயிகளுக்கு வழங்கப்படுமாம்; மீதமுள்ள ஒரு இலட்சம் ஏகரா விவசாயக் கூட்டுறவுச் சங்கங்களிடம் கொடுக்கப்படுமாம்.

சாகுபடி செய்பவருக்கு வருடத்தில் மொத்தம் ரூ 1,600 வருமானம் கொடுக்கக் கூடிய நிலமே கட்டுப்படியாகக் கூடிய நில அளவு என்று விளக்கிக் கூறப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

'பிப். 20: பொது வேலை நிறுத்தம்'

'மாணவர்களே! அணிவகுப்பில் திரளுவீர்!'

தி. மு. க. மாணவர் கிளை அமைப்பாளர் வேண்டுகோள்

சென்னை, பிப். 6—

"பிப்ரவரி 20! பொது வேலை நிறுத்த நாள்! என்று தமிழகத் தலைவர்களின் கூட்டணி முரசறைந்திருப்பதைத் தமிழக மாணவர் சமுதாயம் நன்குக உணரும்!

1. தேவிகுளம், பீர்மேடு, நெய்யாற்றங்கரை, கொச்சி - சித்தூர். பாலக்காடு ஆகிய தாலுகாககளிலுள்ள தமிழ்ப் பகுதிகளும், வடக்கே சித்தூர் மாவட்டத்திலுள்ள தமிழ்ப் பகுதியும் புதிதாக உருவாகும் தமிழ் மாநிலத்தோடு இணைக்கப்பட வேண்டும் என்ற உரிமை வேட்கையை எடுத்துரைக்கவும்;

2 அதற்கான நடவடிக்கைகள் எடுக்குமாறு சென்னை அரசியலாரையும், இந்திய அரசியலாரையும் வற்புறுத்தவும்; (3) தட்சிணப் பிரதேச யோசனைக்குக் கண்டனம் தெரிவிக்கவும்; (4) புதிதாக உருவாகும் தமிழ் மாநிலத்திற்குத் 'தமிழ் நாடு' என்று பெயரிடும் படி வற்புறுத்தவும் பொது வேலை நிறுத்தம் பிப்ரவரி 20—ல் தமிழகத் தலைவர்களால் மேற்கொள்ளப்படுகிறது!

"மத்திய சர்க்காரின் அநீதியை எதிர்த்துப் பொதுவேலை நிறுத்தத்தின் மூலம் எழுப்பப்படும் கண்டனக் குரலில், மாணவர் சமுதாயத்தின் பெருமுழக்கமும் இணைந்திருக்க வேண்டியது இன்றியமையாததாகும். டில்லியின் தீர்ப்பு வெளிவந்தவுடனேயே மாணவர் சமுதாயம் தமிழரின் மனக் கொதிப்பை நாட்டவர் அறியும் வண்ணம் ஊர்வலங்கள், வேலை நிறுத்தம் மூலம் தெரிவித்தது; தி. மு. க. மாணவர் கிளை அதில் பெரும் பங்கு பெற்றது மிகவும் குறிப்பிடத்தககதாகும். தி. மு க மாணவர் கிளையின் தலைமை நிலையம், தமிழரின் உரிமை வேட்கையை உரிய முறையில் காட்டிய எல்லா கட்சி மாணவர்களையும் இதுபோது பாராட்டி வாழ்த்தக் கடமைப்பட்டிருக்கின்றது.

"பிப்ரவரி—20! நாட்டின் மனநிலையை மமதை நிறைந்த டில்லிக்கு உணர்த்தும் நாள்! அந்த நாள்—ஆலைத் தொழிலாளர், உழவர் பெருமக்கள், வாணிகத் துறையினர், அலுவலகப் பணி புரிவோர், நடுத்தர வகுப்பினர் அத்தனை பேரும் அநீதிக்கு எதிரான அணிவகுப்பில் திரளும் நாள்! விடுதலைப் படையின் முன்னணியில் எப்பொழுதும் இருந்துவரும் மாணவர் சமுதாயம், பிப்ரவரி 20-ம் நாள் திரளும் அணிவகுப்பில் முன்னணியில் இருந்து தீரவேண்டியது இன்றியமையாததாகும். அதற்கான சர்வ கட்சிக் கூட்டணியின் வேண்டுகோளும், தி.மு க. பொதுக் குழுவின் ஆதரவும் கிடைத்துவிட்டன.

"பிப். 20-ல் பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக் கழகங்கள் எல்லாம் மூடிக்கிடக்கட்டும்! நிலைமையை மத்திய சர்க்கார் உணரட்டும்! அந்த அளவுக்கு மாணவர்கள் எல்லோரும் பொது வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவார்களாக!

"பிப் 20-ல் பிறகட்சி மாணவர்களோடு கைகோர்த்துத் தோளோடு தோள் நின்று ஒத்துழைத்துப் பொதுவேலை நிறுத்தத்தை வெற்றிகரமாக்கவேண்டும் என்று குறிப்பாக தி. மு. கழக மாணவர் கிளைத் தோழர்களையும், பொதுவாக எல்லா மாணவர்களையும் கேட்டுக் கொள்கின்றேன்.

"அமைதி—கட்டுப்பாடு—கண்ணியம்—இவை, அண்ணா அவர்கள் அறப்போர் வீரர்களுக்கு அளித்துள்ள ஆயுதங்களாகும். அவற்றைப் பெற்ற நமக்கு, வெற்றியின்றி தோல்வி ஏது?

"பிப்ரவரி 20—தமிழர் தன் மானத்திற்கு அறைகூவல்—மறந்துவிட வேண்டாம்!
'மாணவர்களே! வெற்றி நமதே என்று பிப்ரவரி 20-ல் கொட்டுவீர் முரசம்"

என்று, 'தி மு கழகம்—மாநில மாணவர் கிளை' அமைப்பாளர் தோழர் பொன்னுவேலு வேண்டுகோள் ஒன்றின் மூலம் தமிழக மாணவர்களைக் கேட்டுக்கொள்கிறார்.

ஈரானுக்கு ரஷ்யாவின் எச்சரிக்கைக் குறிப்பு

தெஹ்ரான், பிப். 5—

பாக்தாத் ஒப்பந்தத்தில் ஈரான் இணைந்திருப்பது பற்றி சோவியத் ரஷ்யா அதிருப்தியடைந்திருக்கிறது.

'இந்த ஒப்பந்தத்தில் ஈரான் இணைந்திருப்பதால், ரஷ்யாவின் எதிரிகள் ரஷ்யாவைத் தாக்குவதற்கு ஈரானை பயன்படுத்தக்கூடும்' என்று சோவியத் சர்க்கார் ஈரான் சர்க்காருக்குத் தெரிவித்திருப்பதாக அறிவிக்கப்படுகிறது

"தனக்கு அபாயம் ஏற்படக் கூடிய நிலையை வெறுமனே பார்த்துக் கொண்டிருக்க ரஷ்யாவால் இயலாது,"

என்று, சோவியத் சர்க்கார் தனது குறிப்பில் தெரிவித்துள்ளது.

புயல் நிவாரண நன்கொடை

சென்னை கொத்தவால்சாவடி தோழர்களால் அளிக்கப்பட்ட நன்கொடைத் தொகையான ரூ. 23—2—3 தோழர் து. மகாதேவன் அவர்கள் மூலம் கிடைக்கப்பெற்றோம்.

—தி. மு க. தலைமை நிலையம்

* * *

குத்தாலம் தி. மு. கழகத் தோழர்கள் முயற்சி

குத்தாலம் தி. மு. கழகச் சார்பில் புயல் நிவாரண நிதிக்காக கழகத் தோழர்கள் தெருத்தெருவாகச் சென்று ரூ 75—11—0-ம், 65 பழைய துணிகளும் திரட்டி நிதியைத் தலைமைக் கழகத்திற்கும், துணிகளை தஞ்சை மாவட்டக் கழகத்தவருக்கும் அனுப்பியுள்ளனர்.

அன்பளிப்பு

31—1—56-ல், சென்னை கல்லறை மைதானத்தில் நடைபெற்ற தி. மு. கழகப் பொதுக்கூட்டத்தில், சென்னை தோழர் வி. இரங்கராசன் அவர்களால் 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 நன்கொடை தரப்பட்டது — பெற்றுக்கொண்டோம் — நன்றி —பொறுப்பாளர்.

* * *

நெல்லை மாவட்டம் கோவில் பட்டி தோழர் எஸ். எம். காசி அவர்கள் 'நம் நாடு' இதழ் வளர்ச்சி கருதி அனுப்பிய நன்கொடை ரூ. 5-ம் வரப்பெற்றுக்கொண்டோம்—நன்றி — பொறுப்பாளர்.

செய்திச் சுருள்

கல்லக்குடி தி.மா.மு. கழக அமைப்பு

19—1—56 மாலை 5 மணிக்கு இவ்வூர் நாடக அரங்கில் 'திராவிட மாணவர் முன்னேற்றக் கழக' அமைப்புக் கூட்டம், தோழர் அ. தம்புச்சாமி தலைமையில் நடைபெற்றது. தோழர் து. இரத்தினசாமியைச் செயலாளராகக் கொண்ட செயற் குழு அமைக்கப்பட்டது. தோழர் தம்புசாமி மாணவர்கள் செயலாற்றும் முறை குறித்தும் விளக்கவுரையாற்றினர்.

இராசபாளையம் பாரதிதாசன் பகுத்தறிவு மன்றம்

22—1—56-ல் மேற்படி படிப்பகத்தின் செயற் குழுக் கூட்டம், தோழர் எஸ் கே. சாமி இல்லத்தில் நடைபெற்றது. பொங்கல் வரவு-செலவுக் கணக்கு சரிபார்க்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டதுடன், மற்றும் சில தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

நந்தியம்பாக்கம் மாணவர் மன்றம் திறப்பு

14—1—56 மாலை 5 மணிக்கு, தோழர் சி. பி. மதியழகன் தலைமையில் மாணவர் மன்றத் திறப்பு விழா நடைபெற்றது. தோழர் இராதாமணாளன் மன்றத்தைத் திறந்துவைத்தார். தோழர்கள் ஜே. எஸ். வாசன், என். எ. இளவரசன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

கோவை அழகிரி நினைவு மன்றம்

22—1—56 காலை 10 மணியளவில், மேற்படி படிப்பகச் சொற்பயிற்சி மன்றக் கூட்டம் தோழர் க. அங்குதாஸ் தலைமையில் நடைபெற்றபோது, 'இன்றைய அரசியல்' என்ற பொருள் பற்றி தோழர்கள் பலர் சொற்பொழிவாற்றினர்.

முத்தமிழ் விழா

16, 17, 18—1—56 ஆகிய 3 நாட்களிலும் பரமக்குடி அரசினர் சேதுபதி உயர்நிலைப் பள்ளியில், முத்தமிழ் விழா நடைபெற்றது. முதல் நாள் விழாவிற்குத் திரு. சுப இராமனுதனுர் தலைமை தாங்கினர். திரு. ந. இராமனுதன் சொற்பொழிவாற்றினர், மறுநாள் இசைத் தமிழ் விழா திரு. தி. கி. சுந்தரமூர்த்தி தலைமையில் நடைபெற்றது. திரு. வீ. உலகஊழியனர் சொற்பொழிவாற்றினர். மூன்றாவது நாள் விழா திரு. தர்மநாதன் தலைமையில் நடைபெற்றபோது, திரு. துரைக்கண்ணு சொற்பொழிவாற்றினர். மாணவர்களின் இன்னிசையும், மாணவிகளின் நடனமும் நடைபெற்றன.

சென்னை இராயபுரம் இலக்கிய மன்றம்

14—1—56 காலை 10 மணியளவில், தோழர் இரத்தினவேலு தலைமையில் சென்னை இராயபுரம் சிவசுப்பிரமணியசுவாமிகோவில்மண்டபத்தில் மேற்படி மன்றத் திறப்பு விழா நடைபெற்றது. திரு. மி. பொன் இராமநாதன் மன்றத்தைத் திறந்து வைத்தார். தோழர்கள் பலர் சொற்பொழிவாற்றினர்.

21—1—56 காலை 10 மணிக்கு, சிவசுப்ரமணியசுவாமி கோவில் மண்டபத்தில், தோழர் ஜோசப் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், 'பொதுநலத் தொண்டு' என்னும் பொருள் குறித்து பல தோழர்கள் சொற்பொழிவாற்றினர். பின்னர் தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டது.

கணியூர் அழகிரி மன்றம்

19—1—56 இரவு 8 மணிக்கு, மன்ற நிர்வாகக் குழுக் கூட்டம் மன்ற அலுவலகத்தில் நடைபெற்றபோது, வரவு—செலவு கணக்குகள் ஒப்புக்கொள்ளப்பட்டதுடன், தோழர் கே. எ. சந்திரசேகரனைச் செயலாளராகக்கொண்ட புதிய செயற்குழுவும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

பாராட்டு

தீண்டாமையை கருவறுக்கும் நோக்குடன் கடலூர் சலவைத் தொழிலாளர்கள், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இலவசமாகச் சலவை செய்து கொடுப்பதென்று மேற்கொண்டுள்ள தீர்மானத்தை வரவேற்று, அவர்களது பரந்த எண்ணத்தையும், அரிசனத் தொண்டையும் பாராட்டு முகத்தான் சென்னை மாநில கூவரத் தொழிலாளர் சங்கம் தனது பாராட்டுதலையும், ஆதரவையும் தெரிவித்து அறிக்கை ஒன்று வெளியிட்டுள்ளது. அக்குறிப்பில், தீண்டாமையைப் போக்கடிக்க அவர்கள் மேற்கொண்ட நடவடிக்கைகளுக்குத் தங்களது அன்பும் ஆதரவும் ஒத்துழைப்பும் கிடைக்கும் என்று தெரிவித்திருக்கின்றனர்.

திருமணம்

25—1—56ல், இராமனுதபுரம் மாவட்டம் வண்டல் தி. மு, கழக தோழர் சே. அப்துல் சையது அவர்கள் திருமணம் நடைபெற்றது. இது நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 நன்கொடை தரப்பட்டது — வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

பெயர் சூட்டல்

திருமலைச்சாமிபுரம் தோழர் எஸ். நடேசன் அவர்களது ஆண் மகவுக்கு 'சம்பத்' எனப் பெயரிடப்பட்டதின் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 நன்கொடை தரப்பட்டது — வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

* * *

29—1—56ல், குளூர் நாகமுத்து நடராசன் படிப்பகத் தோழர் எம். கிருஷ்ணன் அவர்களது மகவுக்கு 'நெடுஞ்செழியன்' எனப் பெயரிடப்பட்டதின் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 நன்கொடை தரப்பட்டது—வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

* * *

8—1—56ல், சென்னை—அயன்புரம் தோழர் வி. ஜி. சுந்தரம் அவர்களது மகனுக்கு முதலாண்டு பிறந்த தின விழாவும், பெயர் சூட்டு விழாவும் நடைபெற்றது. அம்மகவுக்கு தோழியர் சத்தியவாணிமுத்து அவர்களால் 'தம்பிதுரை' எனப் பெயரிடப்பட்டது. இதன் நினைவாக தி. மு. கழக மாநில மாநாடு நிதிக்காக ரூ. 5 தரப்பட்டது. பெற்றுக்கொண்டோம்—நன்றி—பொறுப்பாளர்.

பம்பாயில் கண்ணதாசன் நிகழ்ச்சி

15—1—56 காலை 10-30 மணியளவில், பம்பாய்—மாதுங்கா போதார் கல்லூரி மண்டபத்தில், பம்பாய் தி. மு. கழக உறுப்பினர் கூட்டம் தோழர் எஸ். தியாகராசன் தலைமையில் நடைபெற்றது. தோழர் நெல்லைச்செழியன் வரவேற்புரையாற்றினர். தோழர்கள் எஸ் வள்ளிநாயகம், கண்ணதாசன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

15—1—56 மாலை 6 மணியளவில் மாதுங்கா தி. மு. கழகச் சார்பில், கிளைக் கழக இரண்டாவது ஆண்டு விழாப் பொதுக்கூட்டம் ஜெயின் போர்டிங் மண்டபத்தில் தோழர் தொ. து. அன்புச்செழியன் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தைத் தோழர் யோ. தர்மராசன் துவக்கிவைத்தார் தோழர்கள் இ. எஸ் எஸ். பிச்சையா, என். தியாகராசன், கண்ணதாசன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். தோழர் கண்ணதாசனுக்குப் பல கிளைகள், மன்றங்கள், தனிப்பட்டோர் சார்பில் கைத்தறி ஆடைகள் அணிவிக்கப்பட்டன. புயல் நிவாரணத்திற்கென்ன தாணு தி. மு கழகச் சார்பில் ரூ 40 தோழர் கண்ணதாசனிடம் கொடுக்கப்பட்டது.

16—1—56 காலை 10 மணியளவில், பம்பாய் நகர் மன்றத்தால் நிர்வகிக்கப்பட்டு வரும் பால் பண்ணையையும், அதனை அடுத்துள்ள 'ஆரே காலனி'யையும், தோழர் கண்ணதாசன் பார்வையிட்டார்.

மாலை 6 மணியளவில் கோரேகான் தி. மு. கழகத் திறப்பு விழாப் பொதுக்கூட்டம் 'நவராத்திரி மண்டல்' எனுமிடத்தில் தோழர் இராமன் தலைமையில் நடைபெற்றது கிளைக் கழகத்தை தோழர் இரா. தஞ்சைத்துரை துவக்கி வைத்தார். தோழர்கள் மு. சண்முகம், எஸ் தியாகராசன், கண்ணதாசன் ஆகியோர் பேசினர். தோழர் கண்ணதாஸனுக்கு கோரேகான், காந்திவ்லி, மலாடு ஆகிய கிளைக் கழகங்கள் சார்பில் மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டன. கூட்டத்தில் ரூ. 8 புயல் நிதிக்காக வசூலாயிற்று.

17—1—56 மாலை 8 மணிக்கு, கொலாபா தி மு கழகச் சார்பில், 2-வது ஆண்டு விழாப் பொதுக் கூட்டம் 'காமாஹாலில்' நடைபெற்றது. தோழர் ஜெகநாதன் வரவேற்புரையாற்றினர். தோழர் எஸ். கே. ராஜு தலைமையில் நடைபெற்றக் கூட்டத்தில், தோழர் அன்பரசு கழகக் கொடி ஏற்றுவித்தார். தோழர் கே. கே இராமநாதன் அண்ணா அவர்களின் உருவப்படத்தைத் திறந்துவைத்தார். தோழர்கள் கண்ணதாசன், எஸ். தியாகராசன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

18—1—56 மாலை 4 மணியளவில், தோழர் கண்ணதாசன் தாராவி — 'திராவிடரகத்'தையும், மற்றப் பகுதிகளையும் பார்வையிட்டார்.

மாலை 6 மணியளவில் தாராவி தி. மு கழகச் சார்பில் பொங்கல் விழாப் பொதுக் கூட்டம் வ. உ. சி. திடலில், தோழர் சி. த. மு இரா ஆரியசங்காரன் தலைமையில் நடைபெற்றது. தோழர் சு. தங்கவேலன் கூட்டத்தை ஆரம்பித்து வைத்தார். தோழர்கள் எம். எஸ். கணபதி, த. மு. பொற்கோ, எஸ். தியாகராசன் ஆகியோர் உரையாற்றிய பின், தோழர் கண்ணதாசன் சொற்பொழிவாற்றினர். கண்ணதாசனுக்குப் பல கிளைக் கழகங்கள், மன்றங்கள், படிப்பகங்கள் சார்பில் கைத்தறி ஆடைகள் அணிவிக்கப்பட்டன.

****

பொதுக் குழு முடிவுப்படி

தி. மு. கழக உறுப்பினர் சேர்க்கும் காலம்

29—2—56

வரை நீடிக்கப்படுகிறது

★

கழகம் வலிவும் பொலிவும் பெறக் கழகச் செயலாளர்கள் உறுப்பினர் பதியும் பணியைத் தீவிரமாக்குவார்களாக!

★

தலைமை நிலையத்தில்

பதிவு செய்யப்பட்ட உறுப்பினர்களின் உரிமைச் சீட்டுகள் பிப்ரவரி 15-ஆம் நாளுக்குமேல் கிளைக் கழகங்களுக்கு அனுப்பிவைக்கப்பெறும்

—தி. மு. கழகத் தலைமை நிலையம்

****

அண்ணா சொற்பொழிவு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சகர்களை நிறுத்திற்று; காங்கிரஸ் தேர்தல் சின்னம் 'மாட்டுப் பெட்டி'; தி. த. நா. காங்கிரஸ் சின்னம், 'குடப் பெட்டி.'

"குடம் சின்னமுடையவர்கள், திருவாங்கூர் தமிழ் தாலுகாக்கள் தமிழகத்துடன் இணைய வேண்டும் —என்று கூறி, தேர்தலில் நின்றனர்; அவர்களை எதிர்த்து, மாட்டுச் சின்னமுடைய மலையாளக் காங்கிரசார் போட்டியிட்டனர்.

"அந்த மலையாளக் காங்கிரசாரை ஆதரித்து, 'குடம் சின்னத்திற்கு வாக்களிக்காதீர்; மாட்டுச் சின்னத்திற்கே வாக்களியுங்கள்'—என்று, இப்போது முதன் மந்திரியாக இருக்கிற காமராசர் பிரச்சாரம் செய்தார்; அப்போது அவர் முதன் மந்திரி அல்ல; முதன் மந்திரி அல்ல என்பது மட்டுமல்ல —'பதவியா? எனக்கேன்? எனக்காவது, பதவிக்காக ஆசை வருவதாவது?'—என்று வேறு பேசிக் கொண்டிருந்தவர். அந்த நிலையில், தி. த. நா. காங்கிரசுக்கு எதிராக— மலையாள காங்கிரசுக்கு ஆதரவாக ஊர் பூராவும் சுற்றினர். அவர் போகாத ஊரில்லை; நுழையாத தெரு இல்லை; கேட்காத வீடில்லை; செலவழிக்காத பணமில்லை என்று கூடச் சொன்னார்கள் — எனக்கு அது விவரம் தெரியாது!

"அப்போதே காமராசர், தமிழர்களுக்கு எதிராக வேலை செய்தார்.

"ஆனால், அங்கு வாழும் தமிழர்கள், 'காமராசர் தமிழராக இருக்கலாம்; தமிழர் தலைவராகக் கூட இருக்கலாம்; என்றாலும், நாங்கள் அவர் பேச்சைக் கேட்பதற்கில்லை'—என்று, தி. த. நா. காங்கிரஸ் அபேட்சகர்களையே தேர்ந்தெடுத்தார்கள்.

"அதன் மூலம் உலகுக்கும், இந்திய சர்க்காருக்கும், திரு—கொச்சி, சென்னை மாநில சர்க்கார்களுக்கும், 'நாங்கள் தமிழகத்துடன் சேர்ந்து வாழ விரும்புகிறோம்' என்ற முடிவைத் தெரிவித்தார்கள்.

"குடிமக்கள் தொகைக் கணக்குப்படி (சென்ஸ்) பார்த்தாலும், அந்த வட்டங்களில் பரவலாக— பெருவாரியாக தமிழர்கள்தான் உள்ளனர்.

"நீதிமான்களாக உட்கார்ந்துள்ள உங்களைக் கேட்கிறேன்—ஏன், உங்களுக்குக்கூடக் கட்சிப் பற்று இருக்கக்கூடும்— 'எனக்கு எந்தக் கட்சியுமே பிடிக்காது' என்றும், 'எந்தக் கட்சி பிடித்தாலும் பிடிக்காவிட்டாலும் இந்தக் கட்சி மட்டும் பிடிக்காது' என்றும் கூறுகிற நியாயவான்களைக் கேட்கின்றேன்—'இதைக் காட்டிலும் வேறென்ன அத்தாட்சி, நியாயம் வேண்டும்—தேவிகுளம்; பீர்மேடு தமிழகத்துடன் இணைவதற்கு? என்ன காரணத்திற்காக, எந்த நியாயத்திற்காக இப்போது தமிழகத்திற்கு அவை இல்லை என்று கூறுகிறார்கள்?'—என்று!

"திருவிழாவில் குழந்தை ஒன்று இந்தத் தெருவில் காணமற் போய்விடுகிறது; குழந்தை பூக்கடை போலீஸ் ஸ்டேஷனில் இருப்பதாகத் தெரிந்ததும், குழந்தையைப் பிரிந்த தாய் அங்கு ஓடிச் சென்று, குழந்தையைச் சுற்றி எழெட்டு 'ஜவான்'கள் இருந்தாலும் அவர்களை ஒதுக்கித் தள்ளிவிட்டுக் குழந்தையை வாரி அணைத்து, 'அகப்பட்டுவிட்டாயா, கண்ணே! வயிற்றில் பால் வார்த்தாயடா கண்ணே'—என்று கொஞ்சுகிறாள்; அப்போது ஒரு போலீஸ்காரன், 'ஏம்மா, இது உன் குழந்தையா?' என்று கேட்க மாட்டான். 'தாய் மட்டுமே குழந்தையை இப்படிக் கொஞ்சுவாள்' என்பதை, திருமணமாகாத போலீஸ்காரன் வேண்டுமானால் உணராமலிருக்கலாம்.

"ஆனால், நமது நேரு, திருமணமாகாத போலீஸ்காரர் அல்ல; திருமணமாகி, நெடு நாளைக்கு முன்பே மனைவியை இழந்துவிட்டவர்; அவருக்குக் குடும்பப் பாசமும், பற்றும் தெரியாமல் போனது ஏன்?

"தேவிகுளம், பீர்மேட்டுத் தமிழர்கள், 'நாங்கள் தமிழகத்துடன்தான் சேர்ந்து வாழ்வோம்' என்று தேர்தலின்போது தெரிவித்த பின்னரும், 'அவை தமிழகத்திற்குரியதுதானா' என்பதை ஆராய்ந்தறிய, மூன்று பேர்களை நியமித்தார்; அந்த மூன்று பேரில் சர்தார் பணிக்கர் என்பவர் ஒரு மலையாளி: அவருக்கு, தேவிகுளத்தில் ஏராளமான தேயிலைத் தோட்டங்கள் இருக்கின்றதாம். இவரை அந்தக் கமிட்டியில் சேர்த்து, 'தேவிகுளம், பீர்மேடு யாருக்கு?' என்று தீர்ப்புக் கூறச் செய்தது நியாயம் என்கிறீர்களா?

"இது, இரண்டாவது கட்டம்; முதல் கட்டத்தில், தேவிகுளம்—பீர்மேடு தமிழர்களுக்குச் சிலபல பரீட்சைகள் வைக்கப்பட்டன; அதில் அவர்கள் வெற்றி பெற்றார்கள். பி.ஏ., எம்.ஏ., 'பாஸ்' செய்த பின்பு வேலைக்காக 'சர்வீஸ் கமிஷன்' முன்பாக பரீட்சை கொடுப்பதுபோல், 'தேவிகுளம்—பீர்மேடு பகுதிகள் தமிழர்களுக்கே' என்பதை பணிக்கர் கமிஷன் முன்பும் கூறினார்கள்.

"தேவிகுளம்—பீர்மேடு தங்களுக்கே எனத் தமிழர்கள் கூறுகிறார்கள்; அந்தப் பகுதியில் தமிழர்கள்தான் பெருவாரியாக வாழ்கிறார்கள்; என்றாலும், திரு-கொச்சி சர்க்கார், அந்தப் பகுதிகள் போய்விட்டால் தங்கள் மாநிலத்தின் பொருளாதார நிலையே சீர்குலைந்து விடும் என்று பயப்படுகிறார்கள். 'இரு மாநிலத்தவரும் சந்தித்துப் பேசி முடிவு காணமுடியவில்லை,' என்று கண்ட நேரு, மீண்டும் 'வழக்குக் கட்டு'களைத் தன்னிடத்தில் எடுத்துக்கொண்டு ஆராய முற்பட்டார்.

"இந்த இடத்தில்தான் பண்டித நேரு எவ்வளவு பெரிய தவறு செய்துவிட்டார் தெரியுமா?

"தெருவில் கண்ட மணிபர்ஸ் ஒன்றை இருவர் சொந்தம் கொண்டாடுகின்றனர்; எதிரில் தென்பட்ட பெரியவர் ஒருவரிடம் இருவரும் முறையிட்டால்—அந்தப் பெரியவர் நியாயவானாயிருந்தால், என்ன கேட்பார்? 'உன்னுடையதுதான் என்பதற்கு என்ன அடையாளம்?' என்றுதானே கேட்பார்? 'ஐயா, அதில் ரூ. 7—6—0 இருக்கிறது; சில கடிதங்கள் இருக்கின்றன'— என்று ஏகாம்பரமும், 'அதில் இருப்பது ரூ 7—6—0 அல்ல; அதில் ரூ. 6—7—0 தான் இருக்கிறது'—என்று ஆறுமுகமும் கூறுகின்றனர்; பெரியவர், 'பர்சை'த் திறந்துபார்த்து, யார் கூறிய தொகை அதில் இருக்கிறதோ அவரிடமேதான் 'பர்சை'ச் சேர்க்க வேண்டும்; ஆனால், அவர் அதற்கு மாறாகப் பர்சிலிருப்பதைக் கொஞ்சம் அழுத்திக்கொண்டு, 'அதில் இருப்பது, ரூ. 7—6—0-ம் அல்ல —ரூ. 6—7—0-ம் அல்ல; இருப்பது ரூ 3—9—0 தான்; ஆகவே, அது என்னிடமிருக்கட்டும்'—என்றால், அந்த 'நாணயவானை' என்ன பெயரிட்டு அழைப்பது?

"பம்பாய் மராட்டியர்களுக்கா, குஜராத்தியர்களுக்கா —என்பதை முடிவு செய்யும்போதும், நமக்கு வழங்கியதைவிட கடுமையான அநீதியை—நமக்கு அநீதி வழங்கும் போது காட்டிய துணிவைவிட— அதிகமான துணிவுடன் வழங்கியிருக்கிறார், நேரு!

"கிராமப்புறங்களில் பஞ்சாயத்துக்கள் நடப்பதுண்டு; "'குப்பி எனக்குத்தான்' — என்பான் சுப்பன்; 'இல்லை எனக்குத்தான்'— என்பான் சடையன்; இருவரும் குப்பியுடன், ஆண்டை வீட்டில் கைகட்டி வாய்பொத்தி நிற்பர்; ஆண்டை, குப்பி கொஞ்சம் அழகாயிருப்பதைப் பார்த்துவிட்டு 'என்டா சுப்பா, குப்பி உன்னுடையவளா?' என்று கேட்பார்; 'ஆமாம்' என்பான் சுப்பன்; 'என்னுடையவள்தான்' என்று சடையன் கூறுகிறானே?' என்றால், 'அவன் பொய் சொல்லுகிறான்' என்று சுப்பன் கூறுவான்; இதைக் கேட்ட ஆண்டை, 'குப்பி, சுப்பனுக்கா — சடையனுக்கா?' என்பதை முடிவு செய்ய முடியாமல், 'குப்பிக்காக நீங்கள் இருவரும் சண்டை போட்டுக் கொள்கிறீர்கள்; எனவே, குப்பி என் வீட்டிலேயே இருக்கட்டும்'—என்று தீர்ப்பளித்தால், அந்த ஆண்டையை நாம் என்னவென்று அழைப்பது? அதுபோலத்தானே நேரு நடந்து கொண்டிருக்கிறார்?

"ஒன்று — நேர்மை, நாணயம் என்பதற்கு வேறு பொருள் எழுதட்டும்; அல்லது நேருபண்டிதர், இந்த ஒரு விவகாரத்தில் நாணயமாக நடந்துகோள்ள வில்லை—நேர்மையாகத் தீர்ப்பளிக்கவில்லை என்பதையாவது ஒப்புக்கொள்ளட்டும்.

"எத்தனை பெரிய அநீதி இழைத்திருக்கிறார், நேரு! இதனைக் காங்கிரசார் கேட்க வேண்டாமா?

"இப்படித் தீர்ப்பளிப்பது இட்லர் என்றால், 'அவன் சர்வாதிகாரி; அப்படித்தான் செய்வான்' எனலாம்; முசோலினி கூறினால், 'முரடர்கள் அப்படித்தான் அநீதி இழைப்பார்கள்' எனலாம்; செங்கிஸ்கான் காலத்தில் சொல்லப்பட்டால், 'காட்டுமிராண்டிகள் அப்படித்தான் செய்வார்கள்' என்று சமாதானம் சொல்லலாம்.

"ஆனால், நேரு பண்டிதர்? உலகம் புகழுகிறதே அவரை? உலகத் தகராறுகளுக்கெல்லாம் பஞ்சாயத்து செய்பவராகவல்லவா அவர் விளங்குகிறார்? கொரியா யுத்தத்திற்குச் சமரசம் தேடுகிறாரே! சீனாவிற்கு ஐ. நா. வில் இடமதர வாதிடுகிறாரே! இந்தோ-சீனாவில் போராட்டம் நிற்க வழி கூறுகிறாரே! 'சமாதானத்திற்காகப் பாடுபடுபவர்' என்று கூறப்படுவதை உலகம் நம்புகிறதே! பாழாய்ப்போன இந்த மனம்கூட சில நேரங்களில் நம்புகிறதே! அப்படிப்பட்ட நேரு, இப்படி ஒரு பெரிய அநீதி இழைத்திருக்கிறார் என்றால், கேட்காமல் எப்படி இருப்பது? கேட்காதவர் தமிழராயிருக்க முடியாது! காங்கிரசாராக வேண்டுமானால் இருக்கலாம்; அவர்களைத் தமிழர்கள் எனக் கொள்ள முடியாது.

"'என்ன செய்வது? மராட்டியரும்—குஜராத்தியரும் ஒத்துப் போகவில்லையே? என்ன செய்வார் நேரு?'—என்று கூறும் காங்கிரஸ்காரர்கள் உண்டு; 'என்ன பண்ணுவது? மலையாளிகளும்— தமிழர்களும் சமரசமாகப் பேசி முடிவு காணவில்லையே? நேரு என்ன செய்ய முடியும்?'—என்று வாதிடக் கிளம்பும் காங்கிரசாரை எனக்குத் தெரியும். அப்படியானால், 'அண்ணாதுரை! உன்னிடம் இது குறித்துத் தீர்ப்பு வழங்குமாறு கூறினால் என்ன செய்வாய்?' என்று கேட்பவரும் உண்டு

"அடேயப்பா! அவ்வளவு பெரிய வேலையை எனக்குத் தரமாட்டார்கள்; தந்தால், தகராறுக்கு உரிய பிரதேசங்களில் மக்களின் வாக்கெடுப்பு நடத்துவேன். அதுதானே முறை? அதுதானே நியாயம்?

"தேவிகுளம், பீர்மேடு பகுதியில் வாக்கெடுப்பு நடத்தி, அந்தப் பகுதி மக்கள், 'நாங்கள் கேரளத்துடன்தான் இருப்போம்' என்று கூறிவிட்டால், பின் அவர்களைத் தமிழகத்திற்கு அழைக்க எவருக்கும் உரிமை இல்லை; மராட்டியர்களிடை பம்பாயில் வாக்கெடுப்பு நடத்தி, அந்த மக்கள், 'நாங்கள் குஜராத்துடன்தான் வாழ்வோம்' என்று கூறிவிட்டால் அவர்களை மராட்டியத்துடன் இருக்க வேண்டுமென்று எந்த மராட்டியரும் கோர மாட்டார்கள்.

'நேரு சர்க்காரை அறை கூவி அழைக்கிறேன்—அத்தகு வாக்கெடுப்பு நடத்தத் தயாரா? நான் இப்போது நாலைந்து கட்சிகளுக்குச் சேர்த்துப் பேச உரிமை பெற்றிருக்கிறேன்; சேர்த்தே கேட்கிறேன் — 'தேவிகுளம், பீர்மேடு வட்டங்களில் வாக்கெடுப்பு நடத்த நேரு தயார்தானா?'—என்று!

"தேவிகுளம், பீர்மேடு வட்டத்தில் தேர்தல் நடத்தட்டும்; திரு-கொச்சி சர்க்காரும் வேண்டாம்—சென்னை சர்க்காரும் வேண்டாம்; வேறு மாகாண சர்க்காரின் மேற்பார்வையில் தேர்தலை நடத்தட்டும்; வேறு மாகாணப் போலீசாரைக் கொண்டு தேர்தலை நடத்தட்டும்; தமிழ் மக்களிடத்தில் நடைபெறும் அந்த வாக்கெடுப்பில், அவர்கள், 'நாங்கள் கேரளத்துடன்தான் இருக்கப் போகிறோம்' என்று கூறிவிட்டால், நாம் அந்த வட்டங்களைத் தமிழகத்திற்குக் கோரமாட்டோம்.

"பண்டித நேருவுக்குத் தைரியம் இருந்தால் அந்த வாக்கெடுப்பு நடத்தட்டும்; ஆண்மை இருந்தால் அந்த வாக்கெடுப்பு நடத்தட்டும்; 'அறிவுடைமைதான் என் ஆட்சிக்கு அடிப்படை' என்று அகில உலகத்திற்கும் அவர் சொல்லுவது உண்மையானல், இந்த வாக்கெடுப்பு நடத்தட்டும்."

டாக்டர் சி. நடேசனர் நினைவு நாள்:

தேவிகுளம், பீர்மேடு பற்றி தி. மு. கழக விளக்கம்

சென்னை—'நடேசன் நகர்' (சேப்பாக்கம்)

பார்த்தசாரதி நாயுடு தெருவில்,

8—2—56 புதன்கிழமை மாலை 6 மணிக்கு

தலைவர்:

அலமேலு-அப்பாதுரை

பேசுவோர்:

அண்ணா

என். வி. நடராசன்

கா. அப்பாதுரை

(மன்ற அமைப்பாளர் இராமச்சந்திரன் படத்தைத் திறந்துவைப்பார்)

—டாக்டர் சி. நடேசன் மன்றம்

கே. ஏ. மதியழகன்

சுற்றுப்பயணம்

பிப். 8: உடுமலைப்பேட்டை—(தி. மு. க. ஊழியர்—மாணவர்கள்—ஆலைத் தொழிலாளர் பிரதிநிதிகள் கூட்டம்)
9: பழனி (மதுரை)
11: ஆத்தூர் (சேலம்)
12: திருப்பத்தூர் (வ. ஆ)
14: சென்னை—எழுகிணறு
16: சென்னை (கல்லூரிகள் உயர்நிலைப் பள்ளிகள், மாணவர் பிரதிநிதிக் கூட்டம்)
20: சேலம்.
22: பட்டிவீரன்பட்டி—பாண்டியனார் நினைவு நாள்

தேவிகுளம்—பீர்மேடு:

கழகக் கூட்டம்

மன்னார்குடி
தேரடி மைதானத்தில்
9—2—56 மாலை 6 மணிக்கு

பேசுவோர்:
ஈ. வெ. கி. சம்பத்
கே. கே. நீலமேகம்

என். வி. நடராசன்

சுற்றுப்பயணம்

பிப். 8: சேப்பாக்கம்
9: குன்றத்தூர்
10: பெத்துநாயகன் பேட்டை
11: ஆரணி
12: காலை: மாயவரம்—சர்வ கட்சித் தோழர்கள் ஆலோசனைக் கூட்டம்
பிற்பகல்: காரைக்கால்—சர்வகட்சி தோழர்கள் ஆலோசனைக் கூட்டம்
மாலை: திருநள்ளாறு—பொதுக்கூட்டம்
13: இராணிப்பேட்டை சர்வ கட்சிப் பொதுக்கூட்டம்
15: சென்னை—செம்பியம்
19, 20: சென்னையில் சர்வகட்சிக் கூட்டம்
22: அண்ணாமலைநகர்.

திருமணம்

9—2—56 காலை 9½ மணியளவில் மன்னார்குடி ராகவநாயக்கன் தெரு, மணமகன் இல்லத்தில், தோழர் கே. கே. நீலமேகம் தலைமையில், தோழர் தங்கவேலு—தோழியர் இராசலக்குமி திருமணம் நடைபெறும். தோழர் ஈ. வெ. கி. சம்பத் வாழ்த்துரை வழங்குவார்.

பொதுக்கூட்டம்

9—2—56 மாலை 6 மணிக்கு, குன்றத்தூர் பெரிய தெருவில், பாவு தோயும் தொழிலாளர் சங்கத் திறப்பு விழா, தோழர் டி. இராசரத்தினம் தலைமையில் நடைபெறும். தோழர்கள் என். வி. நடராசன், முகவை-ஆர். எஸ். பாண்டியன் ஆகியோர் பேசுவர்.

ஏற்றுமதிக்குத் தடை!

புதுடில்லி, பிப். 6—

கடலைப் பருப்பு, கடலை மாவு, ஆகிய பருப்பு வகைகளின் ஏற்றுமதியைத் தடை செய்ய மத்திய சர்க்கார் முடிவு செய்துள்ளனர்.

அண்மையில் ஏற்பட்ட விலை உயர்வைத் தடுக்கவே இந்த நடவடிக்கை எடுக்கப்படுகிறதாம்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ